**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**OS.28/2024**

நாள்.02.07.2025

**வா.சா.1. பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் சிதம்பரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் நகை பட்டறை தொழில் செய்து வருகிறேன். 1, 2 பிரதிவாதிகளை எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் திருத்துறைப்பூண்டியில் உள்ள முத்துப்பேட்டை சாலையில் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். 2019–ஆம் வருடம் பிரதிவாதிகளின் மகள் திருமணத்திற்கு பணம் தேவைப்பட்டது. கடனாக அவர்கள் வீட்டிற்கு பக்கத்தில் வசித்து வரும் திருமதி.சந்திரா என்பவரிடம் கடனாக பணம் கேட்டார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சந்திரா என்பவர் தன்னிடம் பணம் இல்லை என்றும், வேறு 3–வது நபரிடம் கடனாக வாங்கி தருவதாக சொன்னார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2019–ம் வருடம் ஏப்ரல் மாதத்தில் ரூ.1 லட்சத்தை சந்திரா என்பவர் என்னிடம் கடனாக பெற்று பிரதிவாதிகளிடம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சந்திராவிடம் பணம் ஏதும் கடனாக கொடுக்கவில்லை. 1–ம் பிரதிவாதி திருத்துறைப்பூண்டியில் உள்ள இந்தியன் வங்கியின் காசோலையை பூர்த்தி செய்யப்படாமல் கையொப்பம் மட்டும் போட்டு சந்திரா என்பவரிடம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1, 2–ம் பிரதிவாதிகள் கடன் வாங்குவதற்காக

03.04.2019–ல் ரூ.50/– முத்திரை தாளில் கையொப்பம் இட்டு பூர்த்தி செய்யப்படாமல் சந்திராவிடம் கொடுத்த பத்திரத்தை தான் நான் தற்போது பூர்த்தி செய்து காலாவதி ஆனதை மறைப்பதற்காக 10.12.2022 என தேதியிட்டு இந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2019–ல் ஏப்ரல் மாதத்தில் 1–ம் பிரதிவாதி மகளுக்கு திருமணம் முடிந்து பின்னர் 30.07.2019–ல் கடனாக பெற்ற தொகையை 1–ம் பிரதிவாதி, சந்திராவிடம் கொடுத்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1–ம் பிரதிவாதி, சந்திராவிடம் வாங்கிய கடனை அசல் மற்றும் வட்டியுடன் திருப்பி செலுத்திய பிறகு பிரதிவாதிகள் கொடுத்த காசோலை மற்றும் முத்திரை தாளை கொடுக்கும் படி கேட்டபோது சந்திரா என்பவர் மேற்படி காசோலை மற்றும் முத்திரை தாளை வாதியான என்னிடம் இருந்து வாங்கி தருவதாக சந்திரா பிரதிவாதிகளிடம் சொன்னார் என்றால் அவருக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. சந்திரா என்பவர் பிரதிவாதிகளிடம் நான் வட்டி அதிகமாக கேட்பதாக சொன்னார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கடிதத்தை யார் எழுதியது என்றால் நான் தான் எழுதினேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கடிதம் அசல் **பி.வா.சா.ஆ.1** ஆகும். மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கடன் வாங்கிய தேதி 04.04.2019 என்றும், கடன் வாங்கியவர் பெயர் எம்.ராஜேந்திரன் (ரவி பூண்டு கடை), 10 F, முத்துப்பேட்டை ரோடு என்றும் கடன் வாங்கிய தொகை ரூ.1 லட்சம் என்றும், மாத வட்டி ரூ.6,000/– என

எழுதப்பட்டுள்ளது என்றால் இந்த வழக்கிற்கு அது சம்பந்தம் இல்லை. 1–ம் பிரதிவாதி, சந்திரா என்பவரிடம் இருந்து கடனாக பெற்ற ரூ.1 லட்சத்தை கடந்த 30.07.2019–ல் 1 லட்சத்தை சந்திராவிடம் கொடுத்து விட்டார் என்றும், பணத்தை பெற்று கொண்ட சந்திரா என்பவர் ரூ.30,000/– அவர் வைத்து கொண்டு மீதமுள்ள ரூ.70,000/– வாதியான என் அக்கௌண்டில் போட்டு விட்டார் என பி.வா.சா.ஆ.1 கடிதத்தில் சொல்லியுள்ளேன் என்றால் அந்த கடனுக்கும், இந்த வழக்கிற்கும், சந்திராவிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மாதம் ரூ.6000/– வட்டி என்றும், மொத்த வட்டி ரூ.24,000/– என்றும், அதில் அசல் தொகையை ரூ.70,000/– ல் கழித்தது போக பாக்கி ரூ.46,000/– வரவு உள்ளது என கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் இவ்வழக்கிற்கு சம்பந்தம் இல்லை. 1–ம் பிரதிவாதிக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சையில் இருந்து வந்ததால் சந்திராவை சந்தித்து மேற்கொண்டு கணக்கை முடிக்க முடியாமல் போய்விட்டதால் சந்திராவும், நானும் தொடர்ந்து 1–ம் பிரதிவாதியிடம் அதிகமாக வட்டி கேட்டதால் 1–ம் பிரதிவாதி திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் 04.04.2023–ல் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அதன் பேரில் என்னையும், சந்திராவையும் காவல் நிலையத்தில் அழைத்து உதவி ஆய்வாளர் விசாரணை செய்தபோது என் தரப்பில் வந்தவர்கள் பணம் கொடுக்கல் வாங்கல் சம்பந்தப்பட்ட பிரச்சனை என்பதால் காவல் நிலையத்திற்கு வெளியே பேசி தீர்த்துக்கொள்கிறோம் என

கேட்டுக்கொண்டதின் பேரில் அந்த புகாரின் பேரில் பிரதிவாதி மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்று சொன்னால் காவல் நிலையத்தில் என்னை விசாரிக்க அழைக்கவில்லை, நானும் செல்லவில்லை. அந்த புகார் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதிகளுக்கு பணம் கொடுத்தது சம்பந்தமாக ஜாமீன் சந்திரா என்பவர் இருந்து வந்ததால் நான் சந்திரா வீட்டில் வைத்து தான் கொடுக்கப்பட்டது என எழுதப்பட்டுள்ளது என்றால் இந்த வழக்கிற்கும், இந்த கடிதத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள கடனுறுதி பத்திரம் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் பக்கம் 3–ல் என்னிடம் ரூ.3 லட்சம் கடனாக பெறவில்லை என்றும், அதற்கு ஆதரமாக எவ்வித பூர்த்தி செய்யப்படாத கடனுறுதி பத்திரமும், காசோலையும் எழுதி கொடுக்கவில்லை என சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. ஒரு பத்திரத்தை வாங்கினால் எழுதிய தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 காலாவதி சட்டத்தால் பாதிப்பு அடையக்கூடாது என்ற காரணத்தினால் 2022 என தேதியிட்டு இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் என்னிடம் எந்த கடன் தொகையும் வாங்கவில்லை என்றும், நான் இந்த வழக்கிற்காக வா.சா.ஆ.1 ஆவணத்தை தயார் செய்து

இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் கோரியபடி எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றும், வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :- இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.